உ
சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

# திருத்தொண்டத் தொகை

(7ஆந் திருமுறை)



நல்லூர் நாயன்மார்க்கட்டு வெயிலுகந்த ஸ்ரீவிநாயகர்
ஆலயத்தில்

## பெரியபுராண படன பூர்த்திவிழா வெளியீடு

12-08-1986

இலவச வெளியீடு:

அகில இலங்கைத் திருமுறை மன்றம்
31/12, சங்கிலியன் வீதி,
நல்லூர்-யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

திருத்தொண்டத் தொகைக்குப் பெருமை அதிகம். திருக் கயிலையில் சிவபெருமானுக்கு அருகிலேயே இருந்து தொண்டு செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெண்கள் இருவரை விரும் பியதற்கும் பூமியிலே அவதரித்ததற்கும் காரணம் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமிழ்நாட்டிலே அவதரித்து திருத்தொண் டத் தொகையைப் பாடவேண்டுமென்று சிவபெருமான் தனது திருவுள்ளத்தில் எண்ணியதே என்பர்.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத் துக்கு வழிவகுத்த திருத்தொண்டத் தொகையை சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடத் திருவாரூர் தியாகராசப் பெரு மானே அடியெடுத்துக் கொடுத்தருளினர்.

இத்தகைய திருத்தொண்டத் தொகைப் பதிகம் யாழ்ப் பாணம் நல்லூர் வெயிலுகந்த ஸ்ரீ விநாயகராலயத்தில் நடை பெற்ற பெரியபுராண படன பூர்த்தியின்போது வெளியிடப் பெறுவது திருவருட் செயலேயாகும்.

அனைவரும் தினந்தோறும் திருத்தொண்டத் தொகை யைப் பாராயணம் செய்தால் பெரியபுராணத்தைப் பாரா யணம் செய்ததையொக்கும். எமக்குத் தோன்றாத் துணை யாயிருந்து அருள்புரிந்த விநாயகப் பெருமான் திருவடி களில் இவ்வெளியீட்டைச் சமர்ப்பிப்பதுடன் இப்புண்ணிய கைங்கரியங்களுக்குப் பலவழிகளிலும் உதவியும் பங்கும் கொண்டு சிறப்பித்த அடியார்கள் அனைவருக்கும் எம் வணக்கத்தை உரித்தாக்குகின்றோம்.

சி. கிருஷ்ணமூர்த்தி
(அமைப்பாளர்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம்
நல்லூர், யாழ்ப்பாணம். 12-8-1976



உ

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

# திருத்தொண்டத் தொகை

## 7 ஆம் திருமுறை

பண்: கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர் நீதிக்கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரயன்தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கும் அடியேன்
நம்பிரான் றிருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூருரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைகொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதி
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன் 9
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்குமடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரிலம்மானுக் கன்பரா வாரே.

திருச்சிற்றம்பலம் 11

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழ எடுத்து
நேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர் மென்கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்.

— பெரியபுராணம்


அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் சார்பில் நடைபெறும் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை உபயகாரர்கள்

**ரதி வாச் வேக்ஸ் ஸ்தாபனத்தினர்**

எல்லா விதமான மணிக்கூடுகள்; ரேடியோக்கள்; தொலைக் காட்சிப் பெட்டிகள் திருத்துவதற்கும் சகல விதமான சாய்ப்புச் சாமான்கள் மற்றும் மணிக்கூடுகள், ரேடியோக்கள் புதிதாக வாங்குவதற்கும் உகந்த சிறந்த ஒரே ஸ்தாபனம்.

# ரதி வாச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோர்ஸ்

**42, 44, 46 கஸ்தூரியார் விதி,**

**யாழ்ப்பாணம்.**

உ

சிவமயம்

# பஞ்சபுராணப் பாடல் விளக்கம்
# திருமுறைப் பாடல்கள்

# ஒலிப்பதிவு நாடாவில்

ஈழத்து, தமிழகத்துத் திருமுறை
இசைச் செல்வர்களினதும் பேரறிஞர்களினதும்,
**விளக்கவுரையுடன்**
விரைவில் ஒலிப்பதிவு செய்து
சைவ ஆலயங்கள், சைவ நிறுவனங்கள்,
சைவப் பெருமக்களுக்கு வழங்கவுள்ளனர்.

தொடர்பு:

## அகில இலங்கைத் திருமுறை மன்றம்
**31/12, சங்கிலியன் வீதி,**
**நல்லூர் - யாழ்ப்பாணம்.**

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002